BRAMPTON

**Media Release**

உடனடி வெளியீட்டுக்காக

ப்ராம்ப்ட்டன் நகரின் முன்மொழியப்பட்ட 2023 ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம் எதிர்காலத்திற்கான அடித்தளம் அமைக்கிறது

***முன்மொழிவானது, பாதுகாப்பான, ஆரோக்கியம்ன மற்றும் நன்கு இணைக்கப்பட்ட இன்னும் அதிக சமூகங்களை வளர்ப்பதுடன் முன்னெப்போதுமில்லாத கையிருப்பு நிதியையும் தன்வசம் கொள்ளவிருக்கிறது***

ப்ராம்ப்ட்டன், ON (பிப்ரவரி 16, 2023) – ப்ராம்ப்ட்டன் நகரின் **வரைவு நிலை** வரவு செலவுத் திட்டம் 2023 இப்போது, உள்ளீடுகள், யோசனைகள் மற்றும் பின்னுட்டக்கருத்துக்கள் வழங்க கிடைக்கப்பெறுகிறது.

முன்மொழியப்பட்ட வரவுசெலவுத் திட்டமானது, பல முக்கிய நகரக் கட்டுமானத் திட்டங்கள் மற்றும் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வு முன்னுரிமைகளை எடுத்தியம்புகிறது; அதே நேரத்தில் வரி விகிதத்தை பணவீக்க மட்டத்திற்குக் கீழே iருக்கும் வகையில், நகரப் பகுதியில் வரிக்கான மசோதா 2.9 சதவீதம் என முன்மொழியப்பட்டுள்ளது. வரவுசெலவுத் திட்டத்தில் 134 மில்லியன் டாலர் தொகை கையிருப்பு நிதியாக பங்களிப்பு செய்துள்ளது; அதே வேளையில் இரண்டாவது மருத்துவமனை மற்றும் புதிய புற்றுநோய் பராமரிப்பு மையம் உட்பட வரலாற்றுச் சிறப்புமிக்க சுகாதார முதலீடுகளுக்கான ஆதரவைக் கட்டமைக்கும். மற்றும் அவற்றைத் தொடரவும் செய்யும்.

தற்போதுள்ள நகர திட்டங்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கும், உள்கட்டமைப்பை நிலைத்து நிற்கும் வகையிலான மட்டத்தில் வைத்திருப்பதற்கும், எதிர்கால வளர்ச்சிக்கு தயார்படுத்துவதற்கும், நகர சேவைகளுக்கு 2.9 சதவீதம் சொத்து வரி அதிகரிப்பு செய்ய வேண்டி பட்ஜெட் குழுவினிடம் நகரம் முன்மொழிந்திருக்கிறது. இது அங்கீகரிக்கப்பட்டால், 2023 சொத்து வரி மசோதா, நகர சேவைகளுக்கு 2.9 சதவீதமும், பீல் சேவைகளுக்கு 2.8 சதவீதமும், பள்ளி வாரியங்களுக்கு 0 சதவீதமும், ஆக மொத்தம் 5.7 சதவீதமாக சொத்து வரி அதிகரிக்கும். ப்ராம்ப்ட்டனில் உள்ள சராசரி குடியிருப்பு வீட்டுவகை சொத்தின் மீது மொத்த சொத்து வரி அதிகரிப்பு $321 ஆக இருக்கும்.

ஒவ்வொரு ஆண்டும், குடியிருப்பாளர்களுக்கு முக்கியத்துவம் வாய்ந்த முன்னுரிமை கொண்ட விஷயங்களில் நகரம் முதலீடு செய்வதையே ப்ராம்ப்ட்டன் நகரத்தின் வருடாந்திர வரவுசெலவுத் திட்டம் உறுதி செய்கிறது; இது முன்னுரிமைகொண்ட விஷயங்கள், இலக்குகள் மற்றும் முன்முயற்சிகளை அடையாளம் காட்டுகிறது. சமீபத்தில் நடத்தப்பட்ட டெலி டவுன் ஹால் மூலமாக, குடியிருப்பாளர்கள் தாங்கள் செலுத்தும் வரித்தொகையானது, சுகாதாரம், குறைவான வரிகள், சமூக பாதுகாப்பு மற்றும்

பொழுதுபோக்கு ஆகியவற்றையே முக்கிய முன்னுரிமை கொண்ட விஷயங்கள் என்று குறிப்பிடுவதைக் கவனித்தது.

**முன்மொழியப்பட்ட 2023 வரவு செலவுத் திட்டத்தின் முக்கிய சிறப்பம்சங்கள்**

*சமுதாயத்திற்கான உள்கட்டுமான அமைப்பு*

- $492 மில்லியன் முதலீடு – மூலதன திட்டப்பணிகளுக்கு
- மூன்று ஆண்டுக் காலத்திற்கு $21 மில்லியன் -டவுண்டவுன் மறு உயிர்ப்பித்தல்

*சுகாதாரப் பராமரிப்பு*

- மருத்துவமனை தீர்வையைத் தொடர்தல்- இது ப்ராம்ப்ட்டனுக்கு இன்னொரு மருத்துவமனை மற்றும் புதியதொரு புற்றுநோய் மையம் கட்டுமானம் செய்வதற்காக

*பேருந்துப் போக்குவரத்து*

- பேருந்து போக்குவரத்து வசதிகளை மின்மயமாக்குதலுக்கும் பேருந்து நிறுத்துமிடம் மற்றும் பராமரிப்பு வசதியமைப்புக்காக $210 மில்லியன்
- சிங்க்வாகவ்ஸி சாலை கார்ரிடார்-இல் ஸூம் சேவையை விரிவாக்குவதற்காக $15.4 மில்லியன்

*சமுதாயப் பதுகாப்பு & அவசரகால சேவைகள்*

- சமுதாயப் பாதுகாப்புச் செயல் திட்டத்தினைக் கொண்டு சேர்க்க $650,000
- $8 மில்லியன் -தீத்தடுப்பு சாதனங்கள் மற்றும் வாகனங்களுக்காக
- 24 புதிய முழுநேர தீத்தடுப்பு வீரர்கள்

*விளையாட்டு & பொழுதுபோக்கிற்கான முதலீடுகள்*

- புதியதொரு விளையாட்டுக்களம் கட்டுமானம் செய்தல் உள்பட ஹௌடென் பொழுதுபோக்கு மையத்தினை மேம்படுத்த - $24 மில்லியன்
- கோர் மெடோஸ் இல் இருக்கின்ற கிரிக்கெட், சாக்கர், டென்னிஸ் மைதானங்கள் மற்றும் கட்டிடங்களை மேம்படுத்த - $9 மில்லியன்

2023 ஆம் ஆண்டிற்கென முன்மொழியப்பட்ட ப்ராம்ப்ட்டன் வரவுசெலவுத் திட்ட ஆவணங்களை இங்கு காணலாம்.

**2023 ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்டம் பற்றிய உங்கள் எண்ணங்களைக் கூறுங்கள்**

நகரத்தில் தொடர்ச்சியான தொலைபேசி டவுன் ஹால்கள், வார்டு சார்ந்த காபி குடித்தபடியேயான அரட்டைகள் மற்றும் வியாபாரிகளுக்கான வட்ட மேசை கலந்துரையாடல் ஆகியவை நடைபெறுவதால், வரவுசெலவுத் திட்டச் செயல்முறையில் தொடர்ந்து ஈடுபாடுகொள்ள பொதுமக்கள் அழைக்கப்படுகிறார்கள்.

2023 பட்ஜெட்டிற்காக மேயர் மற்றும் கவுன்சிலர்கள் பணியாற்றும்போதே, சமூக முன்னுரிமை கொண்ட விஷயங்கள் குறித்த தங்கள் எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ளவும், நகர ஊழியர்களிடம் கேள்விகளைக் கேட்கவும், யோசனைகளை வழங்கவும் பங்கேற்பவர்களுக்கு வாய்ப்பு கிடைக்கும்.

இந்த தேதிகளை ஒதுக்கிக் கொள்ளுங்கள்

- அந்தந்த வார்டுகளில் காப்பி குடித்தபடியேயான அரட்டைகள் – பிப்ரவரி 21, 22, 23, மற்றும் 24, 2023
- வியாபாரிகளுக்கான மெய்நிகர் வட்டமேஜை கூட்டம் – பிப்ரவரி 23, 2023 காலை 8 மணி
- டெலிஃபோன் டவுன் ஹால் #2 – பிப்ரவரி 25, 2023 நண்பகல் 12 மணி

மேற்கொண்டு விபரங்கள் www.brampton.ca/budget இல் கிடைக்கப்பெறுகின்றன மற்றும் ப்ராம்ப்டன் நகரின் Twitter, Facebook மற்றும் Instagram ஆகியவற்றிலும் கிடைக்கின்றன

**2023 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்ட கால அட்டவணை**

பரஸ்பர கருத்துக்கள், விவாதங்கள் பிப்ரவரி 27, 2023 இல் துவங்கும்; வரவு செலவுத் திட்ட ஒப்புதல் பெற திட்டமிடப்பட்டுள்ள தேதி மார்ச் 8, 2023 ஆகும்.

2023 ஆம் ஆண்டிற்கான ப்ராம்ப்டன் வரவுசெலவுத் திட்டம் பற்றிய மேலும் தகவல்களுக்கு வருகை புரியவும்: www.brampton.ca/budget.

**அறிஞர் கூற்றுக்கள்**

"நாங்கள் செய்யும் அனைத்துக் காரியங்களிலும் மக்கள்தான் எங்கள் மனதில் இருக்கிறார்கள்; இந்த முன்மொழியப்பட்ட பட்ஜெட்-உம் கூட அதைத்தான் நிரூபிக்கிறது. நமது நகரத்தின் முன்னேற்றத்தில், சுகாதாரம் மற்றும் சமூக பாதுகாப்பு ஆகியவைதான் சொல்லொணா வகையிலான முக்கியமான தூண்கள் ஆகும். எதிர்காலத்திற்காக பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான நகரத்தை உருவாக்கும்போது, எங்களின் நியாயமான பங்களிப்பினைச் செய்ய நாங்கள் தொடர்ந்து வாதிடுகிறோம். கடந்த100 ஆண்டுகளில் ஜிடிஏவின் முதல் முதலான புதிய மருத்துவக் கல்லூரியை நாங்கள் அமைக்கவிருப்பதால், எங்களின் முதலீடுகள் மற்ற எதற்கும் ஈடான வகையில் ஈர்க்கக்கூடிய வளர்ச்சி அடைந்துள்ளன. இந்தச் செயல்பாட்டினை நாங்கள் செய்யும்போது, உங்களுக்கு எது முக்கியம் என்பதையும், எதிர்காலத்திற்கான

ப்ராம்ப்ட்டனை எவ்வாறு உருவாக்குவது என்பதையும் அறிய விரும்புகிறோம் – உங்களுடன் இணைந்தபடியே.”

- *பேட்ரிக் ப்ரவுன், மேயர், தலைவர், வரவு செலவுத் திட்டக்குழு, ப்ராம்ப்ட்டன் நகரம்*

“நகரத்தின் வரவுசெலவுத் திட்டமானது, நமது சமூகத்திற்கு ஏற்ற சேவை நிலைகளைப் பராமரிப்பதற்கும், எதிர்காலத்திற்காக நமது நகரத்தை உருவாக்குவதில் முதலீடு செய்வதற்கும் எங்களின் வழிகாட்டியாகும். வருடா வருடம், இந்த கூட்டுச் செயல்முறையானது குடியிருப்பாளர்களிடம் கருத்து கேட்கவும், சமூகத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் நமக்கு வாய்ப்பளிக்கிறது. நாம் எங்கு இருக்கிறோம் என்பதில் நான் பெருமிதம் கொள்கிறேன், மற்றும் ப்ராம்ப்ட்டன் மக்களிடம் கருத்து கேட்க ஆவலுடன் காத்திருக்கிறேன். அதே சமயத்தில், நாம் ஒன்றாக இணைந்து செயல்படுவோம் மற்றும் ஒரு சமூகமாக நமது சுகாதார மற்றும் காலநிலை சவால்களை எதிர்கொள்வதற்காகவும் முதலீடு செய்கிறோம்.”

- *பால் விசெண்ட், பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 1 மற்றும் 5; துணைத்தலைவர், வரவு செலவுத் திட்டக்குழு, ப்ராம்ப்ட்டன் நகரம்*

“ப்ராம்ப்ட்டன் நகருக்கென முன்மொழியப்பட்ட 2023 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டமானது, ஒரு சமத்துவமான அணுகுமுறையைப் பின்பற்றுகிறது; இது ப்ராம்ப்ட்டனை தங்கள் வீடெனக் கருதுபவர்களுக்கும், நகரத்தை பொறுப்புடன் வளர்ப்பவர்களுக்கும் நம்பமுடியாத சேவையைத் தொடர்ந்து வழங்க அனுமதிக்கிறது. பொதுமக்கள் கருத்துக்கள் முக்கியமானவை; மேலும் சுகாதாரம், சமூகப் பாதுகாப்பு, குறைவான வரிகள் மற்றும் பொழுதுபோக்கு வசதிகள் ஆகியவற்றில் முதலீடு செய்ய விரும்பும் வகையில், சமூக முன்னுரிமை கொண்ட விஷயங்களைச் சுற்றியே வரவு செலவுத் திட்டத்தை பட்ஜெட்டை உருவாக்கியுள்ளோம். தூரத்தில் அடிவானத்தில் இனம் கண்டு செய்ய வேண்டிய பல சாதனைகள் புரிவதற்காக நாம் மற்றொரு வருடத்தில் பயணிக்கும்போது, தங்கள் எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ள நேரம் ஒதுக்குமாறு அனைவரையும் ஊக்குவிக்கிறேன்.”

- *மார்லன் கல்லிடீன், தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 700,000 மக்களையும் 75,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். Twitter, Facebook, மற்றும் Instagram ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். www.brampton.ca இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்பு**
ப்ராம்ப்ட்டன் நகர பன்முக கலாச்சார ஊடகம்
multiculturalmedia@brampton.ca